Koviloor Digital Library

3-5

கந்தர் கலி விருத்தமும் இசைப்பாடலும்

(இரண்டாம் பாகம்)

ஆசிரியர் :

வித்துவான், அ. சின்னண்ணன்



வெளியீட்டாளர் :

சி. கல்யாணி

கலையகம்,

3, ஆர்பன் ஸ்கூல் தெரு, சென்னை-30.

விற்பனையுரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

பதிப்புரிமை] 1970 [விலை ரூ. 1-00

Koviloor Digital Library

முதற்பதிப்பு-1970



சி. கல்யாணி
கலையகம், சென்னை-30.

இராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை-1.

Koviloor Digital Library

முன்னுரை

நண்பர் வித்துவான் அ. சின்னண்ணன் இரயில்வேயில் தொண்டாற்றுகின்ருர். அவர் கற்ற தமிழ் எல்லாம் அவரும் ஆண்டவனும் ஒன்று கலந்து பாடுவதற்கே உதவுகிறது. முன்னே, 'கந்தர் கலி விருத்தமும் இசைப்பாடலும்' என்ற நூலின் முதற்பாகத்தைப் பாடி வெளியிட்டார். இப்போது மற்ெருரு பாடற்ெருகுதி வெளியாகிறது. பண்ணெடு கலந்து பாடி இன்புறத்தக்கவை இந்தப் பாடல்கள். இவருடைய அனுபவத்தைப் பாடுகின்ருர். இவரே கூறுகின்ருர்: "செந்தில் ஆண்டவன் என் சிந்தையில் குடிகொண்டான். என் வாழ்வில் திருவருளால் ஒரு திருப்பங்கண்டேன். உள்ளங்கை நெல்லிக்கனி போல அவன் அருட்செயல்களைக் கண்கூடாகக் காண்கிறேன்; ....கற்பனைக் கதையன்று கந்தன் செயல், தரங்கண்டருளும் அறங்கண்ட முருகன் என் கருத்தில் காட்சியளிக்கிருன். நாளும் பூமாலையுடன் பாமாலை சூட்டி மகிழ்கின்றேன்!"

மேல் நாம் என்ன கூறுவது? உள் நின்று உணர்த்துதலைக் கனவு என்று பிறர் கூறலாம். ஆனல், கனவும் இவர் போன்ருேர்க்கு நனவாகிறது; மெய்யுணர்வாகிறது; இன்பப்பாடலாய்த் தானே பொங்கி வழிகின்றது. இவர் அனுபவம்அது. அந்த அனுபவம் பெருதார் அதைப்பற்றி விளக்குவது எப்படி முடியும்?

வாழ்க சின்னண்ணன்!
வாழ்க முருகன் அருள்!

பல்கலைக்கழகம்,
மதுரை.
5–3–1970

தெ. பொ. மீனுட்சி சுந்தரன்
துணை வேந்தர்
(Vice-Chancellor)

Koviloor Digital Library

அருளுரை

ஆண்டவன் அருள் வேட்டல்

அன்பர் சின்னண்ணன் ஆண்டவன் அருள் வேட்டுப் பாடிய அன்பின் உருவங்களே இப்பாடல்கள். தன்னை மறந் தின்பமுறும் வேளைகளிற் சொன்ன மொழிகள் கவியுருவம் பெறும் என்பர். அன்பின் விளைந்த கவிதைகள் அளப் பருஞ்சுவையுடையவை; ஆராய்ச்சிக்கு அப்பாற் பட்டவை. ஆதலால்,

'பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ!'

என்பது அன்பு வயப்பட்ட அன்பர் சொல்லுக்குக் கம்பர் வகுத்த இலக்கணம். நாமும் அவர் வழி நின்று அன்பர் சின்னண்ணன் கவிதைகளை அன்புடன் துய்த்து இன்புறு வோமாக!

ஆண்டவன் அருள் வேட்கை யாண்டும் நலம் பயப்பதாக!

புரசைப்பாக்கம்,
சென்னை.
26-4-70

அன்புள்ள,
மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை
மகாவித்துவான்

Koviloor Digital Library

அறிமுகம்

அங்கிங்கெனுதபடி எங்கும் நீக்கமற நிறைந்த இறைவனுக்கு இல்லம் சமைத்தார்கள் பெரியோர்கள். அதில் இறைவனை உருவாக்கி எழுந்தருளச் செய்து வணங்க வழி வகுத்தார்கள். இறைவன் இல்லத்திற்குக் கோவில் என்றும், ஆலயம் என்றும், பெயரிட்டார்கள் தண்டமிழ்ச் சான்ருேர்கள்.

உலகில் பல மொழி பேசும் மக்கள் வாழ்கின்ருர்கள். அவர்களுடைய சமயமும் பற்பல. கோவில்களும் பற்பல விதங்களாகக் கட்டப்பட்டிருக்கின்றன. வழிபாட்டு முறைகளும் ஒன்றுக்கொன்று மாறுபடும். ஆனுல், அவை எல்லாம் ஒரு பெரிய உண்மையை உணர்த்துகின்றன. அஃது ''இறைவன் உள்பொருள்; இல்பொருள் அன்று,'' என்பதாகும்.

கோவில் வழிபாட்டால் பெறும் பயனை ஒன்று, இரண்டு, மூன்று என்று விரல் விட்டு எண்ணிச் சொல்லி விட முடியாது. உயிரினம் உண்மை வழிபாட்டின் உறுபயனைப் பெற்றே தீரும்.

ஔவை மூதாட்டியார் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று அழகாகவும் ஆணித்தரமாகவும் மக்கள் உய்ய உபதேசம் செய்திருக்கிருர். நன்று என்று மாத்திரம் நவின்ருர் அல்லர், அந் நல்லிசை மெல்லியலார். 'சாலவும் நன்று' என்று அடைமொழி பெய்தும் சொன்னுர். மெய்யன்பர் இதன் மேன்மையை உணர்வர்.

ஞாலத்திலேயே ஆலயம் தொழுவதால் சால நன்மை பெறலாம். 'பத்து நாள்கள் கோவிலுக்குச் சென்ருல் போதுமா? பயன் கிட்டுமா? எப்பொழுது கிட்டும்?' என்ற வினு, சிலர் உள்ளத்தில் பிறக்கலாம். ஒரு முறை சென்ருலும் பயனுண்டு; வாழ்நாள் முழுவதும் சென்ருலும் பயனுண்டு.

Koviloor Digital Library

கோவிலில் ஆண்டவனை வழிபடும்போது, நம்மை நாம் எப்பொழுது மறக்கின்றோமோ, அப்பொழுதுதான் பயன் பெற்றவராவோம். ஐயம் இல்லை.

எங்கும் கோவில் என்ற உண்மையும், ஆண்டவனின் நற்றாளை எவ்விடத்திலும் தொழுது இன்பம் பெறலாம் என்ற உண்மையும், நாளடைவில் விளங்க வைக்கும் ஆலய வழிபாடு. அதனால், கற்ற பயனைப் பெறலாம்.

வாய்மைப் புலவர் வள்ளுவர் வாய்விட்டு வண்டமிழில் சொல்லி வைத்தார்.

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?"

கோவில், ஆன்ம நேய அன்பர்களுக்கு அரிச்சுவடி. ஏன்! மெய்யறிவையூட்டும் கல்விக்களஞ்சியம் கோவில் தானே!

விஞ்ஞான அறிவால் மாத்திரம் மெய்ஞ்ஞானம் பெற இயலாது. மெய்ஞ்ஞானம் பெற்றவர்களுக்கு விஞ்ஞான சித்திகள் எல்லாம் சிறு பிள்ளை விளையாட்டு என்பர். அவர்கள் பஞ்ச கிருத்தியங்கள் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள் ஆவார்கள்.

நாம் அனைவரும் ஆண்டவன் குழந்தைகளே. வழி படும் போது, சொல்லும் சொற்கள் எல்லாம் மழலைச் சொற்களே. மழலைச் சொற்களைக் கேளாத தந்தையரும் உண்டோ?

இயற்றமிழாலும் இசைத்தமிழாலும் இறைவனை இறைஞ்சிப் பாட எனக்கு ஊக்கம் அளித்தது ஆலயவழிபாடு. இந்நூல் பாமலராய் மலர்ந்தது. இவ்வாடா மலர்களை வடிவேலனுக்குச் சூட்டி இன்பம் பெறுகிறேன்!

பாடினால் பிறர் என்ன நினைப்பார்களோ என்ற எண்ணம் விட்டு, வாயார, மனமார, உங்குழைய, வள்ளல்

Koviloor Digital Library

குகனைப் பாடினால் இன்பம் பெறுவது உறுதி. ஓடும் மனம் அடங்கும். மனம் அடங்கினால் மாட்சி பெறலாம்.

தமிழகம் பெற்ற தனித்தமிழ்ப் புதல்வர்களாய், செந்தமிழை வாரி வழங்கும் வள்ளல்களாய், தலைசிறந்த பேராசிரியர்களாய் விளங்கும் பன்மொழிப் புலவர், மதுரை பல்கலைக் கழகத் துணை வேந்தர் உயர்திருவாளர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களும், மகா வித்துவான் செந்தமிழ்க்களஞ்சியம், இலக்கணத் தாத்தா, மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்களும் மனமுவந்து இந்த நூலைப் பார்வையிட்டு முறையே முன்னுரையும் அருளுரையும் வழங்கியமைக்கு என் உளங்கனிந்த நன்றியும் வணக்கமும் உரியனவாகுக.

பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பைந்தமிழால் பன்னிருகரனைப் பாடிப் பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் தெவிட்டா விருந்தளிக்கும் வள்ளல் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் இந்நூலினை அன்புடன் ஏற்றுச் சாற்றுக்கவி மனமுவந்தருளினார்.

கடல் மடைதிறந்தாற் போலக், கவிமழை பொழியும் 'காந்தமலை'யில் வாழும் கற்பகத்தருவான வாகீச கலாநிதி, உயர்திருவாளர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இந்நூலுக்குச் சாற்றுக்கவிக் கனிகளை உவந்தளித்தார். இவ்விருவருக்கும் எனது அன்பு கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்நூலைப் பார்வையிட்டுத் 'தந்துரை' தந்த தமிழ்க் கடலின் நிலைகண்டுணரும் தணியா வேட்கை கொண்ட தமிழ்ப்பேரறிஞர் உயர்திருவாளர் அ. வெ. சுப்பிரமணியம் அவர்களுக்கு எனது நன்றி உரியது.

இந்நூலினைச் சீரிய முறையில் அச்சிட்டுதவிய 'ராஜன் எலக்டிரிக் பிரஸ்' உரிமையாளர் மெய்யன்பர் உயர்திருவாளர் து. சுப்பிரமணியம் அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகுக.

கலையகம்,
சென்னை–30

அ. சின்னண்ணன்

Koviloor Digital Library

சாற்றுக்கவி

நேரிசை வெண்பா

கந்தன் இசைப்பாடல் கன்னித் தமிழாலே
இந்த உலகுய்ய ஈந்தனனுல்—சந்ததமும்
சீராரும் சின்னண்ணச் செம்மல் தெவிட்டாத
ஆரா அமுதம்போல் ஆய்ந்து.

89, சிங்கண்ணசெட்டிதெரு,
சென்னை–2
22-4-1970

கிருபானந்த வாரி,
ஆசிரியர்,
திருப்புகழ் அமிர்தம்

தமிழ்ப்பேரறிஞரின் தந்துரை

அகத்தினின்றும் பொங்கிப் பெருகி வழிந்தோடும் அன்பே கவிதையாகும். அன்பர் அ. சின்னண்ணனின் பாடல்கள் எல்லாம் இவ்வகையில் எழுந்தவையே. இவ்வுண்மையைப் பாடல்களைப் படிப்போர் எளிதில் உணர்வர். நிகண்டைப் புரட்டி எதுகை மோனைகளை அமைத்துப் பாடல் எழுதும் புலவரல்லர் சின்னண்ணன். முருகவேளின்மீது மாருத காதல் கொண்டொழுகும் இம்மெய்யன்பரின் இதயச் சுனையினின்றும் பெருகி வழிந்த இப்பாடற்புனலை மாந்தி இன்புறும் பேற்றினைப் பெற்றவர்க்கு இவ்வுண்மை நன்கு புலனுகும். மெய்யுணர்ச்சியைத் தெள்ளிய தமிழ்ப்பாடல் ஆக்கித் தந்துள்ள அன்பருக்குத் தமிழுலகம்–சிறப்பாக அன்பர் குழாம்–நன்றிக் கடப்பாடுடையது என்பதில் ஐயமில்லை. சமயத்தில் நம்பிக்கையும் அன்பு வழியில் ஊக்கமும் குறைந்து வருகின்ற இந்நாளில் இத்தகைய நூல்கள் பெரும்பயனைத் தருவன. புலவர் சின்னண்ணன் முருகன்மீது அன்புக்கவிதைகளைப் பாடித் தமது பத்தியையும் மற்றவர் உள்ளத்தில் அன்புக் காதலையும் வளர்த்து வரவேண்டும். இதற்கு ஏற்பச் செந்திலாண்டவன் அவருக்கு நோயற்ற நீண்ட வாழ்வினையும் தளராத ஊக்கத்தினையும் அருள்வானுக!

வாழ்க தமிழ்! வளர்க இறையன்பு!

அன்பன்,
28—4—70 அ. வெ. சுப்பிரமணியன்.

A. V. Subramanian, B. Sc., B. T., D. S. S. Deputy Financial Adviser, South Central Railway, Secunderabad.

Koviloor Digital Library

சாற்றுக்கவி

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

செந்தமிழின் பேராசான் திருமுருகன்
றனைவாழ்த்தும் செம்மை யாளன்
சிந்தையினில் அவனடியை இருத்துகின்ற
பேராளன் சின்னண் ணப்பேர்
சந்தமுறத் தரித்தவன்நற் றமிழாலே
பேரன்பு சான்ற சீர்த்திக்
கந்தர்கலி விருத்தமோ டிசைப்பாட
லும்பாடிக் கவினத் தந்தான். 1

எளியநடை யாப்பினிலே எளியமுறை
இனியசொற்கள் யாரும் நன்கு
தெளியும்வகை வருந்தொடர்கள் பத்தியினுல்
கரைந்துருகிச் செப்பும் பெற்றி
அளிமிகுந்த முருகவேள் திருவருளின்
பெருஞ்சிறப்பென் றமைந்த எல்லாம்
நளிகந்தர் கலிவிருத்தம் இசைப்பாடல்
தமிழ்நாட்டில் நன்கு வாழி! 2

காந்தமலை,
சென்னை-28
30-4-1970

கி. வா. ஜகந்நாதன்,
ஆசிரியர்,
கலைமகள்.

Koviloor Digital Library

கந்தர் கலி விருத்தம்

உள்ளுறை

1.	யானை முகன் காப்பு	1
2.	தோத்திரம்	1
3.	கலைவாணிக்கு வேண்டுகோள்	2
4.	புலவருக்கு வேண்டுகோள்	3
5.	குமார வயலூர் வள்ளலுக்கு ஒரு விண்ணப்பம்	3
6.	ஐம்புல ஒடுக்கம்	3
7.	வைராக்கியம்	3
8.	மலமகல	4
9.	வழியில் தடையோ?	4
10.	வேண்டுகோள்	4
11.	ஆற்றுமை	8
12.	ஆளாய்விட்டேன்	11
13.	மூன்று எழுத்துக் கவசம்	11
14.	ஆறு எழுத்துக் கவசம்	12
15.	கந்தன் கருணை	13
16.	நூற்பயன்	15
17.	வாழ்த்து	15
18.	நற்றுணை வந்த வெற்றி வேலன்	16

Koviloor Digital Library

இசைப்பாடல்

உள்ளுறை

1. கருணு நிதியே! கணபதியே! 17
2. சிந்தனை செய்திரு மனமே! 18
3. வள்ளி மணாளரே! வரத்தாமதம் ஏனோ? 19
4. திருமகள் மருகா! திருவடி தொழுதேன் 20
5. தேடிக்கொள்வாய் மனமே! 21
6. பிறவா வரந்தருவாய் பெம்மான் முருகா! 21
7. உளங்குழையக் குழகனை நாம் பாடுவோமே. 22
8. உன்னை நினைந்தே என்னை மறந்தே 23
9. செத்துப் பிறக்கும் செயலில் மயங்கிய 24
10. வாரீர்! வாரீர்! தணிகைத் துரையைக் காண 25
11. வா-வா-வா-முருகா! நீ 26
12. கவலையைப் போக்க வழியொன்றுண்டு 27
13. பழநி மலையைச் சாரேனோ? 27
14. ஓங்காரப் பொருளே ஒளிர்வேல் முருகா 28
15. ஆழிசூழ் உலகில் அரனைப் பாடிய 28
16. அரங்கனைப் பாடிய வாயால் 29
17. இறைவா! இறைவா! இறைஞ்சும்—இந்த 29
18. முருகா! முருகா! என்றே சொல்லடா 30
19. முருகா! உன்னைப் பாடப்பாட 31
20. குறைதீர்க்க வரச்சொல்லுவாய் 32
21. தாதைக்குத் தனிப்பொருள் சொன்ன 33
22. எப்போது காண்பேனோ எந்தை முருகன் 34
23. மாணிக்கவேலா மரகத மயூரா! 34
24. எல்லாம் நீயே 35
25. கருணைசெய் தாட்கொள் 36

Koviloor Digital Library



முருகா என்ருல் முத்தமிழ் வருமே
முருகா என்ருல் மும்மலம் கெடுமே
முருகா என்ருல் முத்தியும் கிட்டும்
முருகா என்ருல் முருகனே வருவான்.

Koviloor Digital Library

1. யானை முகன் காப்பு

யானை முகனே! யாவரும் போற்றும்
பானை வயிற்றுப் பரமனே! தெய்வ
யானை கணவனை யார்வமாய்ப் பாட
மோனை யெதுகை முகிழ்பொருள் தாதா.

2. தோத்திரம்

மலைமகள் மைந்தனே! மலர்மகள் மருகனே!
கலைமகள் கணவனைக் காய்ந்தநல் வீரனே!
கலைதிறன் ஒருங்கமை கலைஞனே! என்னுடல்
நிலைதடு மாறுமுன் நின்பதம் தந்திடு. 1

செய்யாள் மருகனே! செந்தமிழ்ச் செல்வனே!
பொய்யார் உளமதில் பொங்கிடும் இன்பமே!
மெய்யாய் என்னகம் மேவிய மேதையே!
கொய்யாப் பழமதைக் கொடுத்தருள் உய்யவே. 2

சங்கரன் மைந்தனே! தண்தமிழ்த் தேவனே!
குங்கும நிறத்தனே! குறத்தியின் கேள்வனே!
சங்கடந் தீர்த்திடும் சண்முகத் தோன்றலே!
தங்கவேல் ஏந்தியே தலையளி செய்யவா. 3

முத்தமிழ் கொஞ்சும் முத்துக் குமரனே!
முத்தியைக் கொடுக்க முந்தும் முதல்வனே!
சத்திவேற் கொண்ட சச்சிதா னந்தமே!
பத்தியில் பழுக்கும் பழம்நீ யல்லவோ? 4

மலைமகள் நீயே! மலர்மகள் நீயே!
கலைமகள் நீயே! கண்ணனும் நீயே!
தலைசடை அரனும் தம்பிரான் நீயே!
நிலைகுலை யாமல் நீயருள் உலகே. 5

Koviloor Digital Library

மறக்கரு ணையால் மாசூர் தடிந்து
மறந்திடா மலைநீ மயில்சே வலுமாய்
சிறக்கவே கொண்டாய் சிங்கார வேலா!
அறக்கரு ணையால் ஆட்கொள் எனையே. 6

3. கலைவாணிக்கு வேண்டுகோள்

கொட்டு மழைபோல் கோமான் குகனை
தட்டுப் படாமல் தமிழிற் பாடக்
கொட்டு வீணை கொண்ட வாணி
கொட்டுச் சொற்கள் கோதை நீயே. 1

பட்டுச் சேலை பாதச் சிலம்பும்
கட்டுச் சுவடி கரங்கொள் வாணி
முட்டில் லாமல் முருகனைப் பாடத்
தொட்டு நெஞ்சில் சொல்லு தாயே. 2

சந்தத் தமிழில் சரஸ்வதி தாயே
கந்த மலர்த்தாள் கந்தனைப் பாட
வந்து நீயென் வாக்கதில் நிற்கும்
அந்த வரத்தை அடியனுக் கருளே. 3

வாணி பலகலை வாணி, புத்தகப்
பாணி, பதமலர் பாடிப் பரவிடப்
பேணிப் பேதையைப் பேண நறுமண
வேணி வேண்டினேன் மேவ என்னிலே. 4

தட்டுத் தாமரை தங்கிய வாணி
கட்டுப் பட்டுக் காமுற நின்றாய்
பட்டு மெத்தை பாங்குடன் நெஞ்சில்
இட்டு விட்டேன் இங்குவா தாயே. 5

Koviloor Digital Library

4. புலவருக்கு வேண்டுகோள்

செய்தி கேளீர் ! செந்தமிழ்ப் புலவீர் !
பய்யச் சென்று பன்னிரு கரனைப்
பெய்யும் மாரிபோல் பேசியே கொணர்வீர்
' உய்தி ' என்ன உரைத்திட எனக்கே.

5. குமார வயலூர் வள்ளலுக்கு ஒரு விண்ணப்பம்

வயலூர் வள்ளலே ! வந்தடைந் தேனே
அயலான் என்று நீ அகற்றிடல் வேண்டா
உயக்கொள் என்னையே உத்தமன் நீயே
சயவேல் சாமியே ! சண்முகச் சிவமே !

6. ஐம்புல ஒடுக்கம்

ஒருசொல் தன்னால் ஒன்பது வாயில்
திருத்த மாகத் திருக்காப் பிடவே
முருகா ! என்னால் முடிய வில்லை
ஒருவாய் திறந்து ஒருசொல் சொல்லே.

7. வைராக்கியம்

சுப்பிர மணியைத் துதிப்போர் விலகி
அப்புறம் போகார் அவனைத் தவிர
எப்பரம் பெறினும் ஏற்பார் அல்லர்
சுப்பிர மணியே துரியா தீதம். 1

கெடுவேன் அந்தோ ! கேசவன் மருகா !
விடுவேன் அல்லேன் வித்தக உள்ளே
நடுவேன் உன்றன் நறுமணப் பாதம்
தொடுவேன் நெஞ்சில் தோத்திரம் செய்தே. 2

Koviloor Digital Library

8. மலமகல

சூர்முதல் செற்ற சுந்தர வேலா !
வேர்முதல் கன்மம் ஆணவம் மாயை
பார்முதல் பூதம் பற்பல வற்றின்
நீர்முதல் அன்ருே? நீக்கிடு தேவா ! 1

சுடுவேல் கொண்டு சூரனை வென்ற
நெடுமால் மருகா ! நேரிலே வந்தேன்
தொடுவாய் வேலைத் தோத்திரம் செய்தேன்
விடுவாய் என்றன் வினைபொடி படவே. 2

9. வழியில் தடையோ?

கந்தா என்று கதறி நின்றேன்
இந்தா என்றே இருகை தரவே
சிந்தா குலத்தில் சிதையும் என்பால்
வந்தா லென்ன வடிவேல் கரனே!

10. வேண்டுகோள்

தேங்கு மின்பம் தேடித் தேரா
ஏங்கி வந்தேன் ஏன்ருய் என்னைத்
தாங்கிக் கொள்ளே தன்மை யோர்ந்தே
நீங்கிப் போகா நித்தன் நீயே. 1

வேகம் கெடவே வேண்டும் முருகா !
தாகம் தணியத் தாராய் தண்ணீர்
மேகம் அணைய வேற்கைக் கந்தா !
சோகம் தானே சொல்லா தோடும். 2

Koviloor Digital Library

பொல்லா நோயால் பொருதென் மெய்யே
வல்லாய் நீயே வாய்ச்சொல் சொல்லிச்
சொல்லா தோடச் செய்வாய் சேயே
எல்லாம் வல்ல என்றன் தாயே. 3

சோதனை செய்யத் தோல்விகள் தந்தே
வேதனை நல்கல் வேட்கையோ கந்தா !
போதனை செய்துன் பொன்னடி காட்டி
வாதனை போக்கி வாழ்ந்திடச் செய்யே. 4

காலம் பார்த்தல் கருணை காட்ட
மூலப் பொருளே முருகா ! முறையோ !
ஆலம் அயின்ற அரனார் மகனே!
நீலச் சிகண்டியில் நீயே வாவா. 5

தஞ்சம் புக்க தனையன் எனக்குக்
கொஞ்சம் அருளைக் கொடுத்தால் என்ன ?
பஞ்சம் உண்டோ ? பரமா ! உனக்கு
நெஞ்சம் இலையோ ? நெடுமால் மருகா ! 6

கோடி கோடி கோடி அடியவர்
பாடிப் பாடிப் பாதம் சேர்ந்தனர்
நாடித் தேடி நானும் பாடினேன்
கூடி மகிழக் குமரா ! வருவாய். 7

வேலை வேலை வேலை என்றுநான்
காலை மாலை காசு தேடினேன்
ஓலை ஏந்தி ஓடி வரும்நமன்
வேலை செயுமுன் வேலைத் தந்துகா. 8

Koviloor Digital Library

இறைவன் நீயே இறைஞ்சும் எனக்கு
மறைவா யிருந்தே வரையா தருளும்
முறைதான் என்னே ! முருகா ! என்றன்
குறையை நேரில் கூறக் கேளே. 9

நேரில் வரவே நேயம் இலையோ ?
ஊரில் எனக்கும் உறவோ இல்லை
பாரில் காணப் பரிந்து நின்றேன்
தேரில் வந்து சேர்வாய் இன்னே. 10

முகங்கள் ஆறு முதல்வா கொண்டாய்
சகங்கள் எல்லாம் தழைக்க வைத்தாய்
பகவான் நீயே ! பரவித் தொழுதேன்
இகத்தில் தோன்றி இரங்கி யருளே. 11

சர்க்கரை உனக்குத் தருபவ ருக்குச்
சர்க்கரை நோயைத் தருவதோ முருகா !
மர்க்கடம் ஏலா மரக்கிளை யுண்டோ ?
தர்க்கமும் வேண்டா தடுத்தருள் புரியே. 12

அரக்கனை வென்ற அரங்கன் மருகா !
குரக்கனை யேனைக் குறிக்கொள் குமரா !
சிரமதைக் குனித்தேன் சிந்தை மகிழ்ந்தே
வரமதை வழங்காய் மலர்த்தாள் தொழுதேன். 13

செந்தில் நாதா! செவ்வடி வேலா!
புந்தி தன்னில் பூமல ரிட்டுச்
சிந்தை செய்துன் சீரடி இறைஞ்சும்
இந்தப் பேதைக் கிரங்குவ தெப்போ ? 14

Koviloor Digital Library

பொங்கல் நாளில் பொங்கு மின்பம்
எங்கும் தங்க இயம்பு கந்தா!
தங்க வேலைத் தங்க மயிலைத்
துங்க மாகத் துதிப்ப தாலே. 15

மரகத மயூரா! மாலவன் மருகா
கரமலர் கொண்டு கள்வளர் மலரால்
பரவுவன் உன்னைப் பாமலர் சூடி
வரமதை வழங்க வந்திடு விரைந்தே. 16

அருவுரு வான அருந்தமிழ்த் தேவா!
மருமலர்க் கோதை மான்மகள் கணவா!
திருவுருக் காட்டித் திருவருள் புரியே.
குருபரன் நீயே குறிப்புநீ வையே. 17

உனக்கும் எனக்கும் உறவோ அநாதி
எனக்கும் உனக்கும் இடையி லிருக்கும்
கனக்கும் மலத்தைக் காய்ந்து வீட்ட
உனக்குத் தெரியும்; உதவாய் விரைந்தே. 18

குழந்தைப் பேச்சில் குழையும் என்மனம்
குழகா உனக்கும் குழந்தை இலையோ!
குழகும் மனந்தான் குகனே எங்கே?
அழநீ காண்டல் அழகோ ஐயா! 19

ஆறு படைவீ டவனியிற் கொண்டாய்
ஏறு மயிலோய்! என்மனந் தானும்
கூறும் ஏழாய்க் கொண்டதில் வாழ்வாய்
வீறு பெறவே விளங்கிய அறிவா! 20

Koviloor Digital Library

11. ஆற்ருமை

அன்னை அப்பா! அல்லும் பகலும்
உன்னை நம்பி உருகி நிற்க
என்னை விட்டே எங்குச் சென்ருய்?
சென்னை உனக்கும் சேய தாமோ? 1

கன்று மேய்த்த கண்ணன் மருகா!
தொன்று தொட்டுத் தொடர்ந்து வந்த
என்றன் மலந்தான் என்று போகும்?
இன்று களைவாய் ஏத்தி னேனே. 2

எங்கும் நிறைந்த என்றன் தாயே
தங்கி என்னில் தன்மை யோர்ந்து
பொங்கி நிற்கும் பொல்லா மலத்தை
அங்கை காட்டி அகற்று வாயே. 3

ஏறு மயிலில் ஏறி என்முன்
ஆறு முகமும் அங்கை வேலும்
நீறும் விளங்க நீயே வந்து
கூறும் எனையும் கூட்டிச் செல்லே. 4

கூட்டிச் செல்லக் குறத்தி குஞ்சரி
போட்டி யுண்டோ? போதக் குருவே!
தோட்டி யாகத் தொண்டு செய்வேன்
நாட்டி விட்டேன் நயனம் உன்மேல். 5

பாட்டுப் பாடும் பத்த ரோடு
கூட்டி விட்டால் குமர வேளே!
ஆட்டு மந்தை யான எங்கள்
கூட்டம் உன்னைக் கூட்டிக் கொள்ளும். 6

Koviloor Digital Library

வாட்டம் போக்க வாவா, வள்ளி
மாட்டு வைத்த மாட்சி என்றன்
மாட்டும் இல்லை மானம் விட்டுக்
கேட்டு விட்டேன் கேண்மை மிக்கே. 7

மானம் இல்லை மாயன் ஓர் நாள்
தானம் கேட்டான் தாய்மா மன், நான்
மோனம் கேட்டேன் மௌனம் என்னே ?
தானம் பலியும் தந்தான் அன்றே. 8

பத்தி வலையைப் பரப்பி விட்டேன்
முத்தி கேட்டு முந்து கின்றேன்
சத்தி வேலா ! சாமி நாதா!
சித்தி பெறவே சிக்கிக் கொள்ளே. 9

முற்றிக் காதல் முருகா உன்மேல்
பற்றிக் கொள்ள பாரில் தவிக்கும்
நெற்றி தொட்டு நேரில் வந்தே
சற்று நிற்பாய் சாமி நீயே. 10

கத்தி நாளும் கதறு கின்றேன்
பித்தம் ஏறிப் பிதற்று கின்றேன்
புத்தி யில்லை புன்மை தீர்த்து
சித்தி தந்துன் சீர்த்தாள் சேர்த்தாய். 11

அத்தா! என்றே அங்கம் நைந்துன்
மத்தன் ஆனேன் வதனம் நோக்கிப்
பத்து நீக்கிப் பற்றிக் கொள்ளே
பத்து மாற்றுப் பசும்பொன் நீயே. 12

Koviloor Digital Library

சிக்கிக் கொண்டால் சித்தம் தெளியும்
பக்க மிருந்து பரிந்து தொட்டே
உக்கம் சேர்த்தி உய்ய வையே
துக்கம் போக்கும் துரிய வாழ்வே! 13

வேண்டி வேண்டி வேண்டி நின்ருல்
தாண்டிப் போகும் தந்தை சாமி!
தோண்டி மண்ணைத் தோளில் போட்டு
மாண்டு போவேன் மாசு யார்க்கு? 14

ஏசும் உலகம் உன்னைத் தானே
மாசு படியா மணிவே லவனே!
காசு தந்து காண நேரா
தேசு நீயே தேவ தேவா! 15

அழுவேன் அழுவேன் அழுது கொண்டே
தொழுவேன் முருகா! தோகை மயில்மேல்
எழுவாய் வருவாய் என்முன் நிற்பாய்
பழுதில் பழம்நீ பார்க்க விரைந்தே. 16

திரும்பிப் பாராய் திருமால் மருகா!
கரும்பு நின்றன் கனிவாய் மொழியே
விரும்பிக் கேட்க வினைதான் விடாதே
துரும்பாய் நானும் துடிக்கின் றேனே. 17

கட்டித் தழுவக் கந்தா உன்னை
எட்டி நிற்றல் ஏனோ என்ருய்?
செட்டி மகனே! செப்பாய் நீயே
முட்டி நிற்கும் முனைப்பை வீட்டி. 18

Koviloor Digital Library

சோமனைத் தலையில் சேர்த்திய சொக்கன்
காமனை எரித்த கண்ணுதல் மைந்தா!
வாமனன் தனக்கு வாய்த்தநல் மருகா!
காமனை நமனைக் காயநின் வேல்தா. 19

விரும்பிக் கேட்டேன் விளக்கம் தாராய்
அரும்பின் தன்மை யறிந்த கந்தா!
கருங்கல் லெனினும் கனிசெய வல்லாய்!
சுரும்பா யுன்னைச் சுற்று வேனே. 20

12. ஆளாய்விட்டேன்

வாளா இருத்தல் வழக்கோ உன்றன்
ஆளாய் விட்டேன் அழுதுகொண் டிருப்பேன்
மூளா வினையே முடித்திட விடாய்நீ
கேளாய் முருகா! கேட்டருள் வாயே. 1

வயது வந்து வாழும் நாளில்
அயர்ந்தும் உன்றன் அரும்பேர் சொல்ல
நயந்து மறந்த நாயேன் அல்லேன்
பயந்த வள்ளி படரும் கோவே! 2

கொண்டாய் எனையும் கோதை வள்ளி
கொண்ட குமரா! கொண்டல் வண்ணன்
கொண்ட மருகா! கோடி கோடி
தொண்டர் தொல்லை தீர்த்த தேவே! 3

13. மூன்று எழுத்துக் கவசம்

முருகா என்னும் மூன்றெழுத் துகளும்
உருக்குக் கவசம் உயிரைக் காக்கும்
செருக்கு விட்டுச் சேயை நாளும்
உருகி நினைத்தால் உதவும் தேறு.

Koviloor Digital Library

14. ஆறு எழுத்துக் கவசம்

ஆறுள் எழுத்தும் ஆருயிர்க் கவசம்
ஆறுள் எழுத்தும் அன்பரின் நேசம்
ஆறுள் எழுத்தும் அங்கையின் அங்குசம்
ஆறுள் எழுத்தும் சரவண பவனே. 1

ஆறுள் எழுத்தும் அழகு மந்திரம்
பேறு நல்கும் பெருமான் மந்திரம்
கூறு பவர்க்குக் குறைதீர் மந்திரம்
ஊறு வருங்கால் உதவும் மந்திரம். 2

வேறு மந்திரம் மேவ வேண்டா
நீறு பூசி நித்தம் போற்று
சோறு நல்கும் சொந்தம் தேறு
ஏறு மயிலோன் எழிலார் பேரே. 3

ஆறு போல அழுது சொல்லு
ஆறு வீட்டில் அமர்ந்தோன் பேரே
மாறு படுவோர் மடிந்து போவார்
சாறு வேதச் சாறு தேறு. 4

ஆறு முகத்தன் ஆறுள் ளெழுத்தும்
நாறும் எங்கும் நாவைக் காக்கும்
கூறு நாளும் கூற்று வாரான்
கூறும் பகையைக் கோரிச் சொல்லு. 5

தாறு மாறு தமிழில் சொல்லின்
வேறு கொள்ளான் வேலன் ஏற்பான்
சேறுள் உளமும் செம்மை பெறுமே
ஆறுள் எழுத்தும் அமுத மாமே. 6

Koviloor Digital Library

15 கந்தன் கருணை

கந்த சட்டிக் கவசந் தன்னை
அந்த முடனே அன்று கனவில்
வந்து காட்டி வாளா சென்றுய்
விந்தை என்னே! விமலன் நீயே. 1

அறிவேன் கவசம் என்றலு மேநீ
குறியா தகன்ற குமரா! என்னுள்
நெறியாய் 'என்றன் ஆறெழுத் துகளும்
அறிநீ கவசம் ஆகுந்' தானே. 2

அருமைத் தேகம் ஆண்டவா தந்தாய்
பெருமை தந்தாய் பேறுகள் தந்தாய்
அருமைப் பாதம் அருளுவ தெப்போ?
ஒருமை பன்மை ஒத்திருப் போனே. 3

பாடப் பாடப் பாத மலர்களைக்
கூட வந்து குதிக்கும் செந்தமிழ்
கூடத் திருந்து கூம்பாச் சொல்மலர்
தேட வேண்டா தேடி வந்திடும். 4

குறுக்கு வழியில் குமரா! உன்னைச்
சிறுக்கு விட்டுச் சென்று கண்டால்
முறுக்கும் உண்டோ? முருகா சொல்லாய்
மறுக்கும் பண்பு வழியில் இல்லை. 5

முருகா முருகா முருகா என்ற
உருக்கும் பெயரை உணர்ந்து சொல்வாய்
அருகும் வினைகள் அவனி தன்னில்
பெருகும் வளங்கள் பேதை நெஞ்சே! 6

Koviloor Digital Library

ஒன்பான் கோள்கள் உறையும் உன்னில்
என்பால் வந்தே எல்லே இல்லா
இன்பம் தருமே இயம்பத் தரமோ?
உன்ருள் என்னுள் உள்ள தாலே. 7

பாடி மகிழப் பண்பு தந்தாய்
தேடித் தேடித் தேம்பு கின்றேன்
ஆடிப் பாடி அருகில் வந்தேன்
ஊடி நிற்றல் உன்றன் பண்போ? 8

உலகில் பயமும் உண்டு மற்றும்
கலக்கம் உளது கந்தா! உன்றன்
மலர்த்தாள் மறந்த மக்கட் கன்ரு?
சிலருக் கிலேயே சீர்த்தி என்னே? 9

அரனுர் மகனே அறுமுக தேவன்
அரங்கன் மருகன் அயில்படைக் கரத்தன்
கரங்கள் குவித்துக் கழலிணைப் பாட
இரங்கி யருள்வான் இசைமணம் மிகவே. 10

முருகா என்ருல் முத்தமிழ் வருமே
முருகா என்ருல் மும்மலம் கெடுமே
முருகா என்ருல் முத்தியும் கிட்டும்
முருகா என்ருல் முருகனே வருவான். 11

தாயாய் தந்தை தாணுய்த் தம்பிரான்
நீயாய் நின்ற நினக்கு விந்தையே !
தாயார் எழுவர் துணிகா சலனே
ஆயார் உண்டோ ஆரா அமுதே! 12

Koviloor Digital Library

பனுவல் பாடப் பண்ணைத் தந்தாய்
தனுவும் கரணமும் தந்த தேவா!
மனுவைத் தந்தேன் மனங்கொள் ஐயா!
தனுவை ஒடித்த தசரதி மருகா! 13

கந்தா என்றால் கனிதா என்று
செந்நாப் போதர் செப்புவர் பொருளே
இந்தா என்றே இரங்கிக் கொடுக்க
வந்தா லென்னே வள்ளல் பழநீ. 14

16. நூற்பயன்

இந்த நூலை இன்றும் என்றும்
வந்து கோயில் வாழ்த்து முடியச்
சந்தம் பொங்கச் சாற்று பவர்கள்
அந்தம் மிக்க அவன்அருள் சேர்வர்.

17. வாழ்த்து

குஞ்சரி குகனும் கூர்வடி வேலும்
செஞ்சொற் குறத்தி சேவலும் மயிலும்
பஞ்சமில் பத்தர் பார்முதல் பூதம்
விஞ்சவே என்றும் விளங்கியே வாழ்க!



Koviloor Digital Library

18. நற்றுணை வந்த வெற்றி வேலன்

அகவல்

இருகரம் கூப்பி ஒருதரம் சொல்லிக்
கந்தனே காப்புக் காப்பென இறைஞ்சி
என்னிரு மக்களும் மனைவியும் விட்டுச்
சென்னையி லிருந்து பன்மைல் தூரம்
டில்லியை நாடிச் சொல்லியே சென்றேன்.
சொல்லிய படியே சொக்கன் மகன்தான்
ஆவல் கொண்டோர்க் கேவல் செய்ய
வள்ளி குஞ்சரி புள்ளி மஞ்ஞை
சேவற் கொடியும் செக்கர் வேலும்
தூர விட்டுத் துணைவ னாகக்
கோலம் தாங்கிக் கோல்கைக் கொண்டு
திருநீறு பொலியத் திருமுகங் காட்டித்
தொண்டு கிழவனாய்த் தோன்றி, மனைவிக்குப்
பகலிலும் இரவிலும் பாங்காய்த் தானே
காவலாய் நின்றான் கருணைக் கடலே!
திரும்பியான் வரவே திருவுருக் காட்சி
மறைந்த தென்று மனைவி கூறினள்.
நன்று செய்த நம்பியின் செயலை
என்றும் மறவேன் ஏத்தினேன் மகிழ்ந்தே.
கந்தன் செயற்குக் கரியும் வேண்டுமோ?
கற்பனை அன்று நற்சான் றிதுவே
நம்பின வர்க்கு நற்றுணை கந்தனே.



Koviloor Digital Library

...LIBRARY, KOVILOOR
A. No. 15557

இசைப்பாடல்

1. கருணா நிதியே! கணபதியே!

பல்லவி

கருணா நிதியே! கணபதியே!
கற்பகத் தருவே! கரிமுகனே!

அனுபல்லவி

அருந்தமிழ் இன்பம் அனைவரும் பெறவே
இசைமணம் மிகவே இயம்பிட வாவா! (கருணா)

சரணங்கள்

சொற்பதம் கடந்த தற்பர! உன்றன்
பொற்பதம் என்னில் நிற்கவே அருள்வாய்.
நற்றமிழ் ஔவை நாடியே துதிக்க
அற்புத மாக அருள்தந் தோனே! (கருணா)

குறத்தியை நாடிக் குகனுனை வேண்டக்
குஞ்சரம் ஆன குஞ்சித பாதா!
அஞ்சிய மாதை அவனுடன் சேர்த்த
விஞ்சு புகழ்பெறு விநாயக தேவா! (கருணா)

நத்தியே நாளும் நானுனைத் தமிழால்
பத்தியாய்ப் போற்றிப் பரவினேன் ஐயா!
சத்திவே லவனுடன் சார்ந்திட எனக்கும்
அத்தி முகவனே அருள்புரி வாயே! (கருணா)

Koviloor Digital Library

2. சிந்தனை செய்திரு மனமே!

எடுப்பு

சிந்தனை செய்திரு மனமே!—தினமே
செந்திலில் நாதனை—நீ
சிந்தனை செய்திரு மனமே!

உடனெடுப்பு

அந்தகன் தனக்கு ஆளாக் காமல்
அடியரைக் காக்கும் அருளாளனைநீ (சிந்தனை)

அமைதி

அந்தமில் அழகனை அருந்தமிழ்ப் புலவனைக்
கந்தமலர்க் கடம்பனைக் கதிர்காமத் துறைவானை
செந்தமிழ்ச் செல்வனைச் செங்கல்வ ராயனைச்
சந்தமார் தமிழ்மாலை வந்தேற்கும் மார்பனை
(சிந்தனை)

உத்தமி புதல்வனை உம்பர்தம் துணைவனைச்
சித்தமீக் குடிகொண்ட சிங்கார வேலனை
முத்துக் குமாரனை மூவர்க்கும் முதல்வனை
அத்திக் கிறைவனை அறுமுகத் தேவனை (சிந்தனை)

வள்ளியின் கணவனைப் புள்ளிமயில் வீரனைத்
துள்ளிவரு வேலனைத் துன்பங்கள் துடைப்போனை
எள்ளுக்குள் நெய்போல எங்கு மிருப்போனை
அள்ளக் குறையாத அமுதத்தை அருள்வோனை
(சிந்தனை)

Koviloor Digital Library

ஓங்கார வேலனை ஒளிர்புகழ்க் கந்தனைச்
செய்யாள் தனக்கு மெய்யான மருகனை
நீங்காமல் நெஞ்சினில் குடிகொண்ட குமரனைப்
பாங்காகப் பாடிடப் பக்கமிருந்' துகேட்போனை
(சிந்தனை)

3. வள்ளி மணாளரே! வரத்தாமதம் ஏனோ?

எடுப்பு

வள்ளி மணாளரே! வரத்தா மதம்ஏனோ?

உடனெடுப்பு

வெள்ளி வேலெடுத்துப் புள்ளி மயிலேறி (வள்ளி)

அமைதி

பள்ளி யறைதனிலே மல்லிகை மஞ்சத்திலே
வள்ளிக் கொடியதிலே கட்டுண்டு விட்டீரோ!
சுள்ளி யனையனென்றே எனைப்பொருட் படுத்தாமல்
எள்ளிவிட் டிப்போதில் எங்குநீர்சென் றீரோ! (வ)

கோலக்கு றத்தியுடன் யானை தரும்அணங்கும்
ஞாலந் தனில்நீர்வர நடுவே தடுத்தனரோ?
ஞாலம் புரக்கும்பெரு கோலப் பணியினிலே
காலங் கழித்துக்கரு வூலக்க ணக்காய்ந்தீரோ?(வ)

ஆறு படைவீட்டினில் ஆரவா ரவாழ்வினில்
அடியனை மறந்தீரோ? பிடியுடன் சென்றீரோ!
ஏறு மயிலில்ஏறி எங்குநீர் பறந்தீரோ!
ஏரகத்துச் செட்டியாரே பாரகத்தில் வருவீரோ!
(வ)

Koviloor Digital Library

கோடானு கோடிபத்தர் கோலும் வலையிற்பட்டே
ஆடாமல் அசையாமல் அங்கேநின் றுவிட்டீரோ?
ஓடாம லேயுமைத் தேடாமல் நானுமினி
வாடாம லேஇங்கே வந்தருள் புரிவீரோ? (வ)

4. திருமகள் மருகா! திருவடி தொழுதேன்

எடுப்பு

திருமகள் மருகா ! திருவடி தொழுதேன்
திருப்புகழ் பாடித் திருத்தணி வந்தே.

உடனெடுப்பு

இருநிலந் தன்னில் ஒருதரம் வந்தே
திருமுகம் காட்டித் திருவருள் புரிவாய். (திரு)

அமைதி

பெருங்காதல் கொண்டேன் பெருமானே ! உன்மேல்
வருங்காலம் எப்போது? வாய்விட்டுச் சொல்வாய்.
நெருங்காமல் என்பால் நெடுநாள் நீ கழித்தாய் (வ)
வருத்தந்தான் என்னே? வள்ளல்நீ சொல்வாய்.
(திரு)

கருவான போதே கண்கொண்டு பார்த்தாய்
ஒருநாளும் பிரியா ஓங்காரப் பொருளே !
அருவான நீயே உருவாக வந்தே
உருவான என்னை உன்பக்கம் சேர்த்தாய். (திரு)

Koviloor Digital Library

5. தேடிக்கொள்வாய் மனமே!

எடுப்பு

தேடிக்கொள் வாய்மனமே!—இந்தத்தேகம்
கூடியி ருக்கும்போதே உயிர்த்துணை வனை நீயே(தே)

அமைதி

கோடி கோடிப் புண்ணியம் செய்து
கொண்ட தேகம் விண்டுபோகு முன்னே (தேடி)

ஓடி ஓடி உயிர்தனைப் பிடிக்க,
நாடியே நமன்வரு முன்னே முருகனை (தேடி)

தேடிய பொருளும் கூடிய மாதும்,
கூடியே நம்முடன் நாடி வருவதில்லை. (தேடி)

பெற்றநற் பிள்ளையும், உற்றநற் றேழனும்,
முற்றுநம் உயிர்தனைப் பற்றியே காப்பதில்லை.(தேடி)

பட்டமும் பதவியும், கட்டிய வீடுமே
பாரினில் சதமில்லை, நீரதில் எழுத்தைப்போல(தேடி)

சூதும் வாதும், போதைப் பொருளும்,
பொழுதினைச் சுருக்கும் அந்தோ? அதனால், (தேடி)

மூடிய போகமும், முனைப்புடன் தானுமே
தேடிய மெய்யறிவைத் தீரமறைத்த தந்தோ! (தேடி)

உத்தமன் முருகனை நித்தமும் போற்றியே
பத்தி வலையிற்படும் பரமன் அவனையே. (தேடி)

6. பிறவா வரந்தருவாய் பெம்மான் முருகா!

எடுப்பு

பிறவா வரந்தருவாய் பெம்மான் முருகா!—இனிப்
பிறவா வரந்தருவாய்.

Koviloor Digital Library

உடனெடுப்பு

மறவேன் உன்றன் மாணடி என்றும் (பிறவா)

அமைதி

அறவாழ்வு வாழவே ஆசைப்பட் டேன் நான்
உறுதுணை செய்வாய் உமையாள் மகனே!
முறஞ்செவி யானை முகத்தோன் தம்பீ !
அறம்பொருள் சொன்ன அச்சுதன் மருகா!(பிறவா)

குறமாது தந்த தினைமாவை உண்ணக்
குறவனுய்ச் சென்ற குமரேச எந்தாய்!
அறமான உன்னை அறியாமல் நானும்
புறம்பாக நின்றேன் புன்மைதீர்த் தருளே(பிறவா)

சூர்முதல் தடிந்த சுடரிலே வேலா !
வேர்முதல் என்றன் வினையதைக் களைந்தே
பார்முதல் பூதம் பற்பல வற்றின்
நீர்முத லான நிர்மல தேவா ! (பிறவா)

7. உளங்குழையக் குழகனைநாம் பாடுவோமே

உளங்குழையக் குழகனை நாம் பாடுவோமே—பாடி
உலகினிலே செழித்துவிளை யாடுவோமே.

களங்கண்ட கந்தனை நாம் நாடுவோமே— நாடிக்
கண்ணிலியின் கதவுதனை மூடுவோமே.

வளங்கொண்ட தமிழிசையை மீட்டுவோமே-மீட்டி
நிலம்வாழும் மாந்தர் தம்மைக் கூட்டுவோமே.

உளம் நிறைந்த உட்பகையை வீட்டுவோமே-வீட்டி
உலகமக்கள் உறவோரெனத் தேறுவோமே.

Koviloor Digital Library

களங்கமிலா மனங்கொண்டு தேடுவோமே-தேடி
மறமாவல் கந்தனை நாம் போற்றுவோமே.
உளங்கொண்ட உத்தமனை நாடுவோமே—நாடி
ஓங்கார உண்மைதனிற் கூடுவோமே.

8. உன்னை நினைந்தே என்னை மறந்தே

உன்னை நினைந்தே என்னை மறந்தே!
உருகித் திளைப்பதெப்போ?—முருகா!
உருகித் திளைப்பதெப்போ?

அன்னை அப்பா! உன்னை மறந்தால்
உய்யும் வழியுண்டோ?—முருகா!
உய்யும் வழியுண்டோ? 1

கன்றை ஈன்ற காராம் பசுப்போல்
கசிந்துருக வல்லே னல்லேன்—முருகா!
கசிந்துருக வல்லே னல்லேன்.

பொன்னையும் மண்ணையும் பொற்றொடி மாதையும்
போற்றியே நைந்தேனே—முருகா!
போற்றியே நைந்தேனே. 2

இன்று நான் சொன்னேன் முருகா! என்றே
ஏற்றருள் வாயோ நீ—என்வாய்ச்சொல்
ஏற்றருள் வாயோ நீ?

கன்றதைப் பிரிந்த காராம் பசுப்போல்
என்றனை நினையாயோ—முருகா!
என்றனை நினையாயோ? 3

Koviloor Digital Library

9. செத்துப் பிறக்கும் செயலில் மயங்கிய

செத்துப் பிறக்கும் செயலில் மயங்கிய
பத்தனை யும்தமிழ்ப் பித்தனை யும்நத்தி
முத்தனு கச்செயும் பித்தனோ? முருகாநீ!
முழுப்பித்தனோ முருகாநீ!

எத்தனை தரம்சொல்லியும் ஏற்றுநடக் காதஇந்த
எத்தனையும் ஏற்றருள்வாயோ? முருகாநீ
தித்திக்கப்பேசித் திருத்தியருள் வாயோ ? நீ
திருத்தியருள் வாயோ?

கற்றுக்கொள் ளனவேநீ முற்றும்சொன் னுலும்சற்றும்
பற்றிக்கொள் ளாதஇந்தப் பதரைநீ நெறிகாட்டிக்
கற்றுக்கொடுத்தே கரையேற்ற வருவாயோ? -முருகா!
கரையேற்ற வருவாயோ?

கந்தா! என்றேங்கிக் கண்ணீர் சிந்தாமல்
அந்தகா ரத்தினில் அழுந்திய அந்தகனை
வந்தே சிந்தையில் நின்றே அருள்வாயோ? -முருகா!
ஒளிதந்தே யருள்வாயோ?

சொந்தமென் றேசொல்லிச் சொக்கியே நாளும்
பந்தம திலேசிக்கி நொந்துசா கும்இந்த
மந்த மதியனுக்கு விடுதலை யருள்வாயோ ?—முருகா
விடுதலை யருள்வாயோ ?

தங்கமயிலி லேறி எங்குமே தங்காமல்
தங்கவே லேந்திநீ தாரகம் சொல்லியே
பொங்கநின் பொற்கழல் பொருத்த வருவாயோ ?—முருகா
பொருத்த வருவாயோ?

Koviloor Digital Library

10. வாரீர் ! வாரீர் ! தணிகைத் துரையைக்காண

எடுப்பு

வாரீர் ! வாரீர் ! —தணிகைத்
துரையைக் காண வாரீர்.

உடனெடுப்பு

வரைமேல் கோயில்கொண்டு
வரையாது வழங்குகின்ற
துரையைக் காணவிரைந்து, (வாரீர்)

அமைதி

அருவிகள் ஓடும் குருவிகள் பாடும்
மருவிய சோலை பெருகிய மலைக்கு (வாரீர்)

குண்டுசுனை பூத்து வண்டுபல மொய்க்கும்
குன்றுபல தோன்றும் நன்றுசெயும் மலைக்கு (வாரீர்)

முருகனை நாடி உருகியே பாடி
இருவினை ஓட இருகரங் கூப்பி (வாரீர்)

திருப்படி ஏறித் திருப்புகழ் பாடித்
திருமுகம் காணத் திருத்தணி மலைக்கு (வாரீர்)

படிகளில் ஏறிப் பாட்டுகள் பாடி
மிடிகளைத் தவிர்க்க முடிகளை அவிழ்க்க (வாரீர்)

தாகமும் தணிய வேகமும் தாழ
மோகமும் நீங்கச் சோகமும் தீர (வாரீர்)

Koviloor Digital Library

பத்தர்கள் கூடிப் பத்தியாய்ப் பாடி
முத்தியை நாடி நத்தியே சேர்ந்து (வாரீர்)

பெண்டுகள் கூடித் தொண்டுகள் செய்து
செண்டுகள் ஏந்திக் கண்டுகொள் முன்னே (வாரீர்)

மார்கழி மாதம் ஊர்களி லிருந்து
கார்பொழி மலைக்கு நீர்தனி லாடி (வாரீர்)

கந்தனைப் பாடிச் சிந்தனை சிறக்க
வந்தனை செய்து வண்புகழ் ஓதி (வாரீர்)

இருவருடன் கூடித் திருவருள் சுரக்கும்
பெரியனைக் கண்டு பேரின்பம் பெற்றிட (வாரீர்)

11. வா—வா—வா—முருகா ! நீ

எடுப்பு

வா–வா-வா, முருகா !—நீ
வா-வா-வா முருகா !

அமைதி

தோகை மயிலேறித் தொல்கழல் போற்றும்
தொண்டரைக் காக்கவே விரைந்துநீ (வா வா)

வாகை மலர்சூடி வண்டமிழ் ஓதிடும்
பாகு கனிமொழி கேட்டிட (வா வா)

ஞான வேலேந்தி ஞாலந் தனிலே
மோனம் தந்திட ஓடியே (வா வா)

கோழிக் கொடியேந்திக் கோதையர் தம்மோடே
ஆழிக் கரையேற்றி அருளநீ (வா வா)

Koviloor Digital Library

12. கவலையைப் போக்க வழியொன்றுண்டு

எடுப்பு

கவலையைப் போக்க வழியொன் றுண்டு
கவனமாய்க் கேள்மனிதா!

உடனெடுப்பு

கவலைப்பட்டுத் தினமும் செத்துப்
புவியிற் பிறவாதே (கவலை)

அமைதி

கற்றோர் பலருங் காட்டிடும் வழியை
முற்றும் பற்றி முதல்வனை நாடுவாய் (கவலை)

சான்றோர் அதனைச் சாதனை செய்து
ஏன்றோர் தமக்கு இயம்பியே சென்றனர் (கவலை)

கந்தன் கடிமலர்ப் பாதம் தொழுதுநின்றால்
வந்த வினைதொலையும் சந்ததம் இன்பமே (கவலை)

13. பழநி மலையைச் சாரேனோ ?

பழநி மலையைச் சாரேனோ ?
பழம்நீ தாஎனக் கேளேனோ ?

பன்னிரு கரனைப் பாரேனோ ?
என்னிரு வினையைத் தீரேனோ ?

மும்மலக் கோட்டையை முரியேனோ ?
இம்மையில் பிறவா திருப்பேனோ ?

Koviloor Digital Library

அறுமுகன் என்னை அழைப்பானோ ?
உறுபல அழகை உணர்த்தானோ?

பஞ்சா மிருதம் படைப்பேனோ?
பஞ்சா மிர்தவணம் பாடேனோ ?

சந்தனக் காப்பைக் காண்பேனோ ?
சந்ததம் அவன்புகழ் பேசேனோ ?

சந்தத் தமிழ்த்தொடை சூட்டேனோ ?
சிந்தை மகிழ்ந்து நில்லேனோ ?

14. ஓங்காரப் பொருளே ஒளிர்வேல் முருகா

ஓங்காரப் பொருளே ஒளிர்வேல் முருகா!- நீபின்
வாங்காமல் வழங்குவாய் வள்ளலே முருகா-வேதனை
தாங்காமல் தவிக்கிறேன் தரைமேல் முருகா ! நாளும்
பாங்காய்ப் பரவுவன் பதமலர் முருகா! என்றன்
ஆங்காரம் அகற்றவா அறுமுக முருகா! (ஓங்கார)

உரைப்பாட்டு

15. ஆழிசூழ் உலகில் அரனைப் பாடிய

ஆழிசூல் உலகில் அரனைப் பாடிய வாயால்
கோழியைப் பாடிக் குஞ்சையும் பாட மறுத்த
பொய்யா மொழிப்புலவன் தனது வாயால் அன்று
முட்டையைப் பாட வைத்த முருகா! நீயும்
முத்தமிழ்ப் பித்தனோ! முருகா! முத்தமிழ்ப்
பித்தனோ?

Koviloor Digital Library

உரைப்பாட்டு

16. அரங்கனைப் பாடிய வாயால்

அரங்கனைப் பாடிய வாயால் மற்ருெரு குரங்கனைப்
பாடவே மறுத்த அந்தப் பிள்ளைப் பெருமாளைப்
பரங்குன்றப் பெருமா! நீ பாரில் வாளா விட்டது
தாய்மாமன் மேல்நீ வைத்த தனிச்சிறப்புத் தானே?
தாய்மாமன் மேல்நீ வைத்த தனிச்சிறப்புத் தானே?

17. இறைவா ! இறைவா! இறைஞ்சும்-இந்த

எடுப்பு

இறைவா! இறைவா! இறைஞ்சும்-இந்த
இரவல னைக்கண் டிரங்காயோ?

அமைதி

சிறைதனில் அடைத்துச் சிந்திக்க வைத்தாய்
பிறை நுதல் வண்ணு! முறையதைக் கேளாய்.
(இறைவா)

மறைபொருள் நீயே உறைவிடம் எங்கே?
மறைவதுன் குணமோ? கறையிலா மணியே!
(இறைவா)

குறையதைக் கண்டு நிறைசெய வாவா,
கறைமணிக் கண்டன் கண்மணி கந்தா!
(இறைவா)

புரவலன் நீயே! புரந்திட வாவா;
வரந்தரும் வரதா! வாழ்த்தினேன் உனையே.
(இறைவா)

Koviloor Digital Library

18. முருகா! முருகா! என்றே சொல்லடா

எடுப்பு

முருகா! முருகா! என்றே சொல்லடா-நாளும்நீ
முருகா! முருகா! என்றே சொல்லடா.

உடனெடுப்பு

மூச்சிருக் கும்வரை நீயுறங் காமலே (முருகா)

அமைதி

முருகா! முருகா! என்று சொல்லியே
மும்மலக் கோட்டையை வீழ்த்தடா—நீ
மும்மலக் கோட்டையை வீழ்த்தடா. (முருகா)

முருகா! முருகா! என்று சொல்லியே
முத்தி பெற்றவர் பலரடா—முன்னே
முத்தி பெற்றவர் பலரடா. (முருகா)

முருகா! முருகா! என்று சொல்லியே
உள்ளம் உருகியே நில்லடா—நீ
உள்ளம் உருகியே நில்லடா. (முருகா)

உள்ளம் உருகியே நின்ருல் உடலில்
தோன்றும் மெய்ப்பாட்டை உணரடா—உடலில்
தோன்றும் மெய்ப்பாட்டை உணரடா. (முருகா)

உருகியே சொன்ஞல் உன்றன் கண்களில்
பெருகும் ஆனந்தக் கண்ணீரைக் காணடா—நீ
பெருகும் ஆனந்தக் கண்ணீரைக் காணடா.
(முருகா)

Koviloor Digital Library

முருகா! முருகா! என்று சொல்ல
வாக்கும் மனமும் நிற்பதை உணரடா
வாக்கும் மனமும் நிற்பதை உணரடா. (முருகா)

வாக்கும் மனமும் தாமாய் நிற்கவே
உள்ளொளி தோன்றுது பாரடா—உன்னில்
உள்ளொளி தோன்றுது பாரடா. (முருகா)

உள்ளொளி தோன்றிஞல் உன்னுள் போராடும்
புலனைந்தும் தாமே ஒடுங்கும் பாரடா
புலனைந்தும் தாமே ஒடுங்கும் பாரடா. (முருகா)

ஒடுங்கவே ஒளிர்வேலன் ஒளியினில் நீயும்
இரண்டற இன்பமாய் இருப்பாய்-என்றும்
இன்பமாய் இருப்பாய் இயம்பினேன் கேளடா.
(முருகா)

19. முருகா! உன்னைப் பாடப்பாட

முருகா! உன்னைப் பாடப்பாட;
பெருக இன்பம் பொங்குது;
உருக உண்மை விளங்குது;
உருவம் எதிரில் தோன்றுது. (முருகா)

போற்றி யுன்னைப் பாடுவேன்;
தோற்றங் கண்டு மகிழுவேன்;
ஏற்றம் என்னே சொல்லுவேன்;
வேற்றுமை தானே மறையுது. (முருகா)

என்னை நானே மறக்கிறேன்;
உன்னைக் கூட நினைக்கிறேன்;
என்னை நீயும் பார்க்கிருய்;
பின்னை வாளா நிற்கிருய். (முருகா)

Koviloor Digital Library

20. குறைதீர்க்க வரச்சொல்லுவாய்

எடுப்பு

குறை தீர்க்க வரச்சொல்லுவாய்
குறிஞ்சிக் கிழவனை - என்றன்
குறைதீர்க்க வரச்சொல்லுவாய்.

உடனெடுப்பு

குஞ்சரி தேவி! கும்பிட்டேன் தாயே!
குகனிடம் நீயே சொல்லுவாய். (குறை)

அமைதி

தஞ்ச மடைந்தேன் என்று கந்தனிடம்
கொஞ்சும் போது கொஞ்சம் சொல்லுவாய்
நெஞ்சில் குடிகொண்டு நேரில் வாராமல்
கஞ்சன் எனக்கரந்து கெஞ்சுமென் பால்வர
(குறை)

பொல்லாத நெஞ்சம் இப்போது நில்லாமல்
சொல்லாத தொல்லை தந்து பல்லார்முன்
கொல்லாமல் கொல்லும் கொடுமை தன்னை
வல்லாளன் அவனை வந்தே இந்த (குறை)

Koviloor Digital Library

21. தாதைக்குத் தனிப்பொருள் சொன்ன

எடுப்பு

தாதைக்குத் தனிப்பொருள் சொன்ன
தங்கவேல் முருகா! இந்தப்
பேதைக்கு அருள்தர 'அதுபெரியது'—என்று
அன்று கனவில் சொன்ன தேனையா ? (தாதை)

அமைதி

மேதைநீ மேலுலகம் கீழுலகம் மயிலேறி
வேலேந்தி வலம்வந்த தேனையா? முருகா !
வேலேந்தி வலம்வந்த தேனையா ? (தாதை)

கோதை குறத்தியை நாடியவள் கொல்லைதனில்
நல்வேங்கை மரமான தேனையா? முருகா
நல்வேங்கை மரமான தேனையா? (தாதை

மாம்பழம் பெறுதநீ மாப்பழனி மலைதனில்
பழம்நீ யான தேனையா ? முருகா !
பழம்நீ யான தேனையா ? (தாதை

மீளாத வேதனையில் எனைமீட்க மிளகாயின்
பழம் தந்த மீனாட்சி பாலா கூறுயோ ?
மீனாட்சி பாலா கூறுயோ ? (தாதை)

Koviloor Digital Library

22. எப்போது காண்பேனே எந்தை முருகன்

எடுப்பு

எப்போது காண்பேனே? எந்தை முருகன்
எழில்மிகு முகங்களை நான் (எப்போது)

உடனெடுப்பு

இப்படி, அப்படி, என்று சொன்ன
இறவாவரம் பெற்ற முத்தர்களே! (எப்போது)

அமைதி

முப்புரம் எரிசெய்த முக்கண்ணன் கேட்க
முதற்பொருள் சொன்ன மூவர் முதல்வனை,
இப்பரந் தனிலேதான் இன்பம் தந்திடும்
இங்கங் கெனுதபடி எங்கும் நிறைந்தவனை
(எப்போது)

கண்டு சொன்னவரே! கந்தனை என்றும்
காமுறும் எனக்கும் காட்ட வேண்டுவனே,
தொண்டு செய்துங்கள் தொல்கழல் தொழுதேன்
தோகை மயிலோனைத் தோன்றச் செய்வீரே.
(எப்போது)

23. மாணிக்க வேலா! மரகத மயூரா!

எடுப்பு

மாணிக்க வேலா! மரகத மயூரா!
விண்ணப்பம் ஒன்றுண்டு விரைந்துநீ கேளையா.

உடனெடுப்பு

ஆணிப்பொன் னம்பலத் தாண்டவன் மகனே!
வேண்டினேன் உனையே வேகம் கெடல்வேண்டுமே
(மாணிக்க)

Koviloor Digital Library

அமைதி

காணி நிலத்திலும் கட்டிய வீட்டிலும்
காரிகை தனத்திலும் கட்டுண்டு வீணே
பேணிக் காலத்தைக் கழித்து ஞாலத்தில்
பேதுறும் இந்தப் பேதையைக் காப்பாய்
(மாணிக்க)

தோணி தந்துமே தொல்லை தந்திடும்
பொல்லாப் பிறவிப் பெருங்கடல் தன்னைப்
பாணி காட்டிப் பத்தனைக் கரையேற்ற
பாரில் வந்தருள் புரிந்திடல் வேண்டுமே
(மாணிக்க)

24. எல்லாம் நீயே

அகவல்

ஞாயிறு நீயே ஞாலம் நீயே
திங்கள் நீயே தீயும் நீயே
செவ்வாய் நீயே சேயும் நீயே
புதனும் நீயே புங்கவன் நீயே
வியாழன் நீயே விமலன் நீயே
வெள்ளி நீயே வேலன் நீயே
சனியும் நீயே சத்தியும் நீயே
கேதும் நீயே கேசவன் நீயே
இராகுவும் நீயே இயமான் நீயே
ஒன்பான் கோளும் உறையும் உன்னில்
என்பால் வந்தே இன்பம் தருமே
உன்றருள் என்னில் நிற்ப தாலே.

Koviloor Digital Library

25. கருணைசெய் தாட்கொள்

திருப்பதி வேங்கடவா! தீந்தமிழால் உன்றன்
மருகன் திருத்தாளில் மாச்சீர் - கருவிளச்சீர்
கொண்ட கலிவிருத்தக் கோதையைச் சாத்திடநீ
மண்மீது காண்பாய் மகிழ்ந்து. 1

ஆறு முகனை அரனார் மகன்றன்னை
ஊறு வருங்கால் உடனுதவும் உத்தமனைப்
பாராமல் வேண்டிப் பணிவாய் மடநெஞ்சே!
வாராமற் போகாது மாண்பு. 2

மருளப்பன் என்னை மறவாமல் வந்தே
அருளப்பா! என்றன் அகத்தின்—இருளை
மருளச்செய் கண்கண்ட மாதேவா! கந்தப்
பெருமானே! நீயிரங்கிப் பேசு. 3

அரிசி பருப்புக் கலந்து திரிந்தேன்
பரியாய் நரியாயிப் பாரில் - விரிவாய்ப்
பெருகும் பிறப்பினை நீக்கிப் பெருமான்
கருணைசெய் தாட்கொள் கசிந்து. 4

